# பண்டாரி அடுத்த வாரம் கொழும்பு வரலாம்; அதற்கு முன் அரசு தனது முடிவை அறிவிக்கும்

Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

ஈழமுரசு

முரசு 2 2-1-86 வியாழன் (மார்கழி 18 ரபியு ஆகிர் 20) முழக்கம் 328

(புதுடில்லி)

இலங்கை இனப்பிரச்சினையை தீர்ப்பது சம்பந்தமான முயற்சியில், இந்திய வெளியுறவுச் செயலர் திரு ரமேஸ் பண்டாரி கொழும்பு செல்ல வேண்டியது அவசியம் என இரு தரப்பினரும் கருதினாலேயே அவர் கொழும்பு செல்வார் என இந்திய வெளியுறவு அமைச்சின் அதிகாரி ஒருவர் புதுடில்லியில் நேற்று தெரிவித்தார் இப்பிரச்சினை தொடர்பாக பாரத அரசு இலங்கையுடன் இடைவிடாத தொடர்பைக் கொண்டிருப்பதாகவும், இதன் ஒரு பகுதியாகவே கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் திரு. ஜே. என். டிக்ஸிற் ஜனாதிபதியையும் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலியையும் சந்தித்துப் பேசினார் எனவும் அவர் குறிப்பிட்டார். பிந்திக் கிடைத்த தகவல்களின் படி திரு பண்டாரி அடுத்தவார முற்பகுதியில் கொழும்பு வரக்கூடுமென ஏ.எப் பி. செய்திஸ்தாபனம் அறிவித்துள்ளது. அதேவேளை தமிழர் விடுதலைக் கூட்டணி தெரிவித்துள்ள யோசனைகளை இலங்கை அரசு ஆராய்ந்து வருவதாகவும், இவ்வார இறுதிக்குள் அரசு தனது முடிவை அறிவிக்கலாமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஏப்ரலில் பொதுத் தேர்தல்?

எதிர்வரும் ஏப்ரல் மாதம் இலங்கையில் திடீர் பொதுத்தேர்தல் நடைபெறலாமென்று நம்பிக்கையான அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதற்கு ஏதுவாக தற்போதைய பாராளுமன்றம் மார்ச் மாத முற்பகுதியில் கலைக்கப்படலாமெனவும் இதே வட்டாரங்கள் தெரிவித்தன.

★ ★ ஜனாதிபதியின் புதுதாண்டுப் பரிசு

# ஸ்ரீமாவோவுக்கு குடியியல் உரிமை வழங்கப்பட்டது

## பீலிக்ஸ், நிகால், ஜலால்தீனுக்கும் கிடைத்தது

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவரும், முன்னாள் பிரதமருமான திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் குடியியல் உரிமைகள் புத்தாண்டுப் பரிசாக ஐந்தாண்டுகளின் பின்னர் நேற்று மீண்டும் வழங்கப்பட்டது. ஜனாதிபதி ஜெயவர்த்தன தமக்குரிய விசேஷ அதிகாரங்களைப் பயன்படுத்தி, குடியியல் உரிமையை வழங்கினார். 1980-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 16ம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டமூலத்தின் மூலம் ஏழு ஆண்டுகளுக்கு திருமதி பண்டாரநாயக்காவின் குடியியல் உரிமை பறிக்கப்பட்டது.

காலஞ்சென்றசுதந்திரக்கட்சி அமைச்சர் பீலிகஸ் டயஸ் பண்டாரநாயக்கா, சுதந்திரக்கட்சி அரசாங்க நீதி அமைச்சின் செயலாளர் திரு. நிஹால் ஜெயவிக்கிரம, ஐ. தே. கட்சியின் பொத்துவில் எம். பி. யாக விருந்த டாக்டர் எம்.

—6-ம் பக்கம் பார்க்க

### ஸ்ரீமாவோ 'ராய்ட்டருக்கு' அளித்தபேட்டி

## "அரசு விரைவில்தேர்தல்நடத்த வேண்டும்; போராளிகளும் போட்டியிடல் வேண்டும்!"

"இலங்கையை இன்று எதிர்நோக்கியுள்ள மிகப் பெரிய பிரச்சினை இனப் பிரச்சினையாகும். இதற்குத் தீர்வு காண்பதற்கு ஒரேயொரு வழி அரசாங்கம் உடனடியாகப் பொதுத் தேர்தலொன்றை நடத்துவதுதான். இந்திய அரசும், தமிழ்ப் போராளிகளை போராட்டத்தைநிறுத்திவிட்டு தேர்தலில் போட்டியிடுமாறு வலியுறுத்த வேண்டும'' என்று மீண்டும் குடியுரிமைபெற்ற திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா நேற்று ராய்ட்டர் நிருபருக்கு அளித்த பேட்டியொன்றில் தெரிவித்தார்.

ஸ்ரீமாவோவுக்கு குடியுரிமை கிடைத்த செய்திகேட்டு, ஆயிரக்கணக்கான மக்கள் நேற்று அவரது ரோஸ்மீட் பிளேஸ் இல்லத்தில் குழுமி நின்றனர்.

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் ஏற்பட்ட நெருக்கடி காரணமாகவே தமக்குக் குடியுரிமை கிடைத்திருக்கலாமென்று சொன்ன ஸ்ரீமாவோ, "நான் எந்தத் தவறும் செய்யவில்லை; ஐந்து வருடங்களின் பின்னராவது நீதி கிடைத்துள்ளது'' எனவும் சொன்னார்.

— 6ஆம் பக்கம் பார்க்க

## தமிழர் கொலை விசாரணைக்கு சர்வதேச குழு வேண்டும்!

### சந்திரஹாஸனின் வேண்டுகோள்

(சென்னை)

இலங்கையில் பாதுகாப்பு படைகளால் தமிழர்கள் கொல்லப்படுவதை விசாரிக்க சர்வதேச விசாரணைக்குழு ஒன்றை அமைக்க இலங்கை அரசு முன்வரவேண்டும் என்று ஈழத்தமிழர்களைப் படுகொலையில் இருந்து காப்பதற்கான அமைப்பின் தலைவர் திரு. எஸ். சி. சந்திரஹாசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கை அரசு, இவ்வாறான சர்வதேச குழு ஒன்றை அமைக்குமாறு ஐக்கியநாடுகள் சபையின் மனித உரிமைக்குழுவைக் கேட்கவேண்டும் எனவும் அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான ஒரு குழுவை அமைத்தால் அதன்முன் சாட்சியமளிப்பதன் மூலம் இலங்கையில் நடைபெறும் படுகொலைகளை நிரூபிக்க முடியுமெனவும் அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## யாழ்தேவி ரயில் கட்டணமும் இன்றிலிருந்து அதிகரிப்பு

(நல்லூர்)

நேற்று முதல் வடபகுதிக்கான புகையிரதக் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. கொழும்புக் கோட்டைக்கான இன்ரசிற்றி புகையிரத பயணச் சீட்டுக்கு ரூபா 25/- அதிகரிக்கப்பட்டுள்ளது. முன்னர் 125 ரூபாவுக்கு வழங்கப்பட்ட பயணச் சீட்டு இன்று தொடக்கம் 150 ரூபாவுக்கு வழங்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்திலிருந்து மருதானைக்கு யாழ்தேவியில் பயணம் செய்வதற்கான 2 ம் வகுப்புக்கட்டணம் 126 ரூபா 10 சதத்திலிருந்து 160 ரூபா 40 சதத்திற்கும், 3ம் வகுப்புக் கட்டணம் 51 ரூபா 30 சதத்திலிருந்து 59 ரூபா 30 சதத்திற்கும் உயர்த்தப்பட்டுள்ளது.

துரையப்பா விளையாட்டரங்கில் புகையிரதப் பயணச் சீட்டைப் பெறுவதற்குச் செல்பவர்கள் தம்முடன் சில்லறைக் காசையும் எடுத்துச் செல்ல வேண்டும் எனக் கேட்கப்படுகின்றனர்.

## யாழ். மாவட்ட புதிய இராணுவ இணைப்பதிகாரி

யாழ்ப்பாண மாவட்டத்துக்கான புதிய ராணுவ இணைப்பு அதிகாரியாக பிரிகேடியர் ரூபசிங்கா நியமிக்கப்பட்டுள்ளார். இங்குள்ள பிரிகேடியர் வனசிங்கா இம் மாதம் 10ம் திகதி கொழும்பு செல்வாரென்றும், அன்றைய தினம் புதிய இணைப்பு அதிகாரி பதவியேற்பார் எனவும் தெரியவந்துள்ளது.

## மூன்று வன்னிக் கிராமங்கள் ஞாயிறு மின்னொளி பெறும்

(வவுனியா)

வவுனியாவில் கிராமிய அபிவிருத்தி ஒருங்கிணைப்புத் திட்டத்தின் கீழ் இம் மாதம் 5-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் நொச்சிமோட்டை, ஓமந்தை, சாஸ்திரி கூழாங்குளம் ஆகிய மூன்று கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்கப்படவுள்ளது.

57 லட்சம் ரூபா செலவில் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

திட்ட அமுலாக்கல் அமைச்சின் பணிப்பாளர் கலாநிதி எஸ். குணசிங்கம் இவ்வைப

—6ம் பக்கம் பார்க்க

## 98 பேர் விடுதலை

(திருமலை)

சில தினங்களுக்கு முன்னர் நிலாவெளியில் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்ட 192 பேரில் 98 பேர் நேற்றிரவு விடுதலை செய்யப்பட்டனர்.

## ராணுவம் சுட்டு இருவர் காயம் வீடு எரிக்கப்பட்டது; ஐவர் கைது

(கிளிநொச்சி)

நேற்று முன்தினம் இராணுவத்தினரின் ரோந்து நடவடிக்கையின் போது வட்டக்கச்சி, கனகபுரம் ஆகிய இடங்களில் துப்பாக்கிப் பிரயோகம் குண்டு வெடிப்பு சம்பவங்கள் இடம் பெற்ற சமயம் சிலர் காயமடைந்தனர். பலர் கைது செய்யப்பட்டனர். ஒரு வீடு தீக்கிரையாக்கப்பட்டது.

...6 ஆம் பக்கம் பார்க்க

விற்பனையிலும் வாசகர் தொகையிலும் முன்னணியில் ஈழமுரசு

## சீரிய சேவை மக்கள் பாராட்டு

(சுழிபுரம்)

சுழிபுரம் கிராமத்தில் அமைக்கப்பட்ட பஞ்சாயத்து சபை மக்களின் அமோக ஆதரவைப் பெற்றுள்ளது.

இது ஆரம்பிக்கப்பட்ட சில காலங்களுள் பல பிரச்சினைகளை மிகவும் சுமுகமான முறையில் தீர்த்துவைத்துள்ளது. இச்சபையின் தலைவராக சட்டத்தரணி திரு. பொன். சிவபாலனும் செயலாளராக திரு. ந. சிவரஞ்சனும் கடமையாற்றுகிறார்கள்.

மக்களுக்குள் ஏற்படும் சிக்கல்களை இலகுவான வழியிலும், பண செலவு அற்ற முறையிலும் தீர்ப்பதில் இச்சபை செயற்படுகிறது என்று இதன் செயலாளர் கூறினார்.

## கண்ணகி ச. ச. நிலைய நிர்வாகிகள்

(புலோலி)

உடுப்பிட்டி கண்ணகி சன சமூக நிலையத் தலைவராக திரு. இ. பரமசாமி தெரிவு செய்யப்பட்டுள்ளார். உப-தலைவராக திரு மு. துரைசிங்கமும், செயலாளராக திரு. கா. மகேந்திரனும், உப-செயலாளராக திரு. இ. தேவராஜாவும், பொருளாளராக திரு. சி. தெய்வேந்திரமும், நூலகராக திரு ப. சுதாகரும். கணக்குப் பரிசோதகராக திரு. செ. சேனாதிராசாவும் தெரிவாகினர். செயற்குழு உறுப்பினர்களாக ஐவர் தெரிவாகினர்.

## சக-ஊழியர் நிதியுதவி

(அச்சுவேலி)

கடந்த ஆனி மாதம் திருகோணமலையில் கொலை செய்யப்பட்ட சாரதி திரு. எம். தம்பிராசாவின் குடும்பத்திற்கு 3775 ரூபா பணத்தை சக ஊழியர்கள் சேகரித்து வழங்கியுள்ளார்கள்.

பருத்தித்துறை பஸ் டிப்போவில் சாரதியாக கடமையாற்றும் திரு. எம். தம்பிராசா சென்ற ஆனி மாதம் திருகோணமலையில் படுகொலை செய்யப்பட்டார். இவரது குடும்பத்தினருக்கு பருத்தித்துறை பஸ் டிப்போ ஊழியர்கள் தமது கார்த்திகை மாதச் சம்பளத்தில் இத்தொகையைச் சேகரித்து நன்கொடையாகக் கொடுத்துள்ளனர்.

## ச. ச. நிலையம் நிகழ்த்திய போட்டி

(அரியாலை)

அரியாலை திருமகள் சனசமூக நிலையம் நடத்திய குறுக்கெழுத்துப் போட்டியில் செல்விகள் சு. சிந்துஜா, சு. சுபாஜினி, சி. விஜிதா ஆகியோர் முறையே 1-ம், 2-ம், 3-ம் இடங்களைப் பெற்றுக்கொண்டனர். இவர்களுக்குத் தலா 100, 50, 25 ரூபா பரிசில்களாக வழங்கப்பட்டன.

## வைத்தியசாலை சிரமதானம்

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை, ஊறணி அரசினர் வைத்தியசாலைகளில் அண்மையில் பல அபிவிருத்தி வேலைகள் சிரமதான முறையில் மேற்கொள்ளப்பட்டன. டாக்டர் செல்வி பத்மலோசனி தலைமையில் நடைபெற்ற இச்சிரமதான வேலையில் பல கட்டில்கள், மின் உபகரணங்கள் என்பன திருத்தியமைக்கப்பட்டதுடன் மேற்படி வைத்தியசாலைகளின் வளவினுள் பல பயன்தரு மரங்களும் நாட்டப்பட்டன. அன்பர் ஒருவரின் அன்பளிப்பாக 'ஸ்ரெரிலைசர்' உபகரணம் ஒன்றும் வழங்கப்பட்டது.

## இளைஞரின் முன் எச்சரிக்கை நடவடிக்கை

(வேலணை)

வேலணை தெற்கு புங்குடுதீவு பிரதான வீதியில் அமைந்துள்ள வேலணை, புங்குடுதீவு பிரதான பாலத்தில் வைத்து டைனமைற் வெடி வீசி மீன் பிடித்தோருக்கு சில இளைஞர் கோஷ்டியினரால் கசையடித் தண்டனை வழங்கப்பட்டு கடுமையான எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது.

இப் பாலத்தில் அண்மைக் காலமாக இப்பகுதியிலுள்ள சிலரும், வெளியூர்களிலுள்ள சிலரும் டைனமற் வெடி வீசி மீன் பிடித்து வருவதால் இப் பாலம் உடைந்து கடலில் விழும் அபாயம் ஏற்பட்டுள்ளது. தற்போது அதிர்ச்சியினால் வெடிப்பு ஏற்பட்டுள்ளது. இப் பாலம் உடையும் பட்சத்தில் புங்குடுதீவு, நயினாதீவு, நெடுந்தீவுப் பகுதி மக்கள் பிரயாணம் செய்ய முடியாத நிலை ஏற்படும்.

## 'சனசமூக சேவைகள் பரந்தவை'

(சரசாலை)

வரணி இயற்றாலையில் சுமார் அறுபதினாயிரம் ரூபா செலவில் சனசமூக நிலையம் ஒன்று கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி கலைவாணி சனசமூக நிலையத் திறப்புவிழா திரு. எம். எஸ். கந்தையா தலைமையில் இடம் பெற்றது. மேற்படி சனசமூக நிலையத்தை சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு. க. துரைராசா திறந்துவைத்தார்.

"நாம் கட்டடங்களை மட்டும் கட்டுவதோடு நின்றுவிடாது ஆக்கபூர்வமான செயல்களை செய்ய வேண்டும். சனசமூக நிலையங்கள், சிறுவர் பராமரிப்பு நிலையங்கள், பாலர் வகுப்புக்கள், வளர்ந்தோர் கல்வி வகுப்புக்கள், சுகாதார நிலையங்கள் போன்றனவற்றை நடாத்த வேண்டும். இச்சன சமூக நிலையம் இக்கிராம அறிவை வளர்ப்பதோடு பொருளாதாரத் துறையிலும் மூல வளங்களைப் பயன்படுத்தி முன்னேற்ற வேண்டும். அது நல்லதொரு விடயமாகும்'' என அவர் தன்னுரையில் குறிப்பிட்டார். திரு. மு. கணபதிப்பிள்ளை, வரணி மகாவித்தியாலய அதிபர் திரு. எஸ். வல்லிபுரம் உட்பட மற்றும் பலரும் உரையாற்றினர்.

## புதிய நிர்வாகிகள்

(அரியாலை)

அரியாலை திருமகள் சன சமூக நிலையத்தின் புதிய நிர்வாகிகள் பின்வருமாறு:-

தலைவர்:- திரு மா. ச. விஸ்வநாதன், உப-தலைவர்:- திரு. இ. பத்மராசா, செயலாளர்:- திரு. ப. ஜெயரூபலிங்கம், உப-செயலாளர்:- செல்வி. செ. கமலேஸ்வரி, பொருளாளர்:. திரு. க. ஜெயக்குமார், உப-பொருளாளர்:- திரு. ஆ. பாஸ்கரன், போஷகர்:- கலாநிதி சு. மோகனதாஸ். ஐந்து பேர் கொண்ட நிருவாக உறுப்பினர்களும், நிலையப் பொறுப்பாளரும் தெரிவு செய்யப்பட்டனர்.

**வியாபாரம்பெருக விளம்பரம் செய்க**

## வரி விளம்பரம்

### தேவை

ஆரம்பிக்கப்படவிருக்கும் அச்சகம் ஒன்றுக்கு அச்சுக் கோப்பாளர் பிளேட்டன் மெஷின் மைண்டர் தேவை. அனுபவம், வயது, சம்பளம் குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும். விள. இல; பி/963, ஈழமுரசு, 37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். பி/963

### கல்வி

பருத்தித்துறை Y.M.C.A. கல்வி நிலையம் ஆத்தியடியில் 3-1-86 காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் மாணவர் தவறாது சமுகமளிக்கும்படி கேட்கப்படுகின்றனர். பாலர் பாடசாலை 6-1-86 இல் தொடங்கும் இயக்குனர்;Y.M.C.A. R15250

## பிறந்தநாள் வாழ்த்து

✻ மீசாலை பரிமளாராசா-சுபாஷினி தம்பதியின் மகன் டிலுக்சன் இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ சரசாலை இராசலிங்கம்-புஷ்பராணி தம்பதியின் மகள் ஜெயபவானி இன்று தனது ஐந்தாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ கொழும்புத்துறை கிழக்கு ஈஸ்வரன் - விஜயராணி தம்பதியின் மகள் அகல்யா இன்று தனது ஐந்தாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ ஆவரங்கால் குணராசா - விமலாதேவி தம்பதியின் மகன் முரளிதாஸ் இன்று தனது நான்காவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ புங்குடுதீவு செல்வராசா - சசிகலா தம்பதியின் மகன் சுபாஸ்கர் இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ யாழ். அத்தியடி சிவப்பிரகாசம் - சரஸ்வதி தம்பதியின் மகள் ஷாமினி இன்று எட்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ வல்வெட்டித்துறை, சண்முகதாஸ் - யோகராணி தம்பதியின் மகன் இளங்கோ இன்று தனது மூன்றாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ கரவெட்டி வடக்கு குணசேகரம் - மங்களேஸ்வரி தம்பதியின் மகன் மதனராஜ் இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.


✻ அரியாலை புங்கன்குளத்தைச் சேர்ந்த பிரகலாதன் - புவனேஸ்வரி தம்பதியின் மகள் பாமினி இன்று தனது பதினேராவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

## மரண அறிவித்தல்

திருமதி

### மீனாட்சிப்பிள்ளை கந்தையாபிள்ளை

1903--1986



மில்க்வைற் மீனாட்சிப்பிள்ளை காலமானார். இவர் செல்லர்- சின்னாச்சி தம்பதிகளின் அன்பு மகளும், மில்க்வைற் தொழிலகத் தாபகர் அமரர் வீ.மு. கந்தையாபிள்ளையின் அன்பு மனைவியும், திருவாளர்கள் இரத்தினகோபால் (பிளான்ரர்), கனகராசா (தொழிலதிபர்), லோகநாதன் (இளைப்பாறிய பி. டபிள்யூ. டீ. ஓவசியர்), வவநாதன் (இலங்கைச் சீனிக்கூட்டுத்தாபனம்), தனலட்சுமி ஆகியோரின் தாயாரும், சபாரத்தினம் அவர்களின் பெரியதாயாரும், தனலட்சுமி, நாகம்மா இந்திரலீலா, புவனேஸ்வரி, நாகரத்தினம் (சாந்தி அச்சக உரிமையாளர்) ஆகியோரின் அன்பு மாமியாரும், பாக்கியலீலா, தவகோபால், இராசகோபால், கமலாம்பிகை, நந்தகோபால், சிவகோபால், யோகராணி. விஜயகோபால், நந்தினி, பிரேமலதா, ராஜினி, டேசிகாதேவி, சந்திராதேவி, பரமதயாளன், நிர்மலானந்தன், நமிர்தலதா, லோகேந்திரன், கருணாகரன் (பொறியியல் மாணாக்கன் லண்டன்) மதிவதனி, சந்திரவதனி, கலைவாணி. ரவீந்திராதேவி, சந்திராதேவி, சாந்தாதேவி. கங்காதேவி ஆகியோரின் அன்புப் பாட்டியாரும், வில்வராசா. (இலங்கை வங்கி முகாமையாளர் ஸ்ரான்லி வீதிக்கிளை) தேவராணி, ஞானேஸ்வரி, தட்சணாமூர்த்தி, சந்திராதேவி, சதானந்தன் கணக்காய்வுத் திணைக்களம்) வேலாயுதம் (ஆசிரியர் கொக்குவில் இந்துக் கல்லூரி,) ஆகியோரின் பாட்டி மாமியாரும், சசீதரன், விஜிதரன், சக்தி, காயத்திரி, சசிதரன். ஹரேபிரியா, கார்த்தீபன், கிருபாலினி, ஜனனி. சயந்தினி, சரவணன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவர். இவரின் பூதவுடலின் இறுதிக் கிரியைகள் மில்க்வைற் தொழிலகத்தின் திருவாலவாய் மணி மண்டபத்தில் வியாழக்கிழமை மாலை 3.00 மணியளவில் நடைபெற்ற பின் கோம்பயன் மணல் மயானத்தில் தகனக்கிரியை நடைபெறும். இவ்வறிவித்தலை உறவினர், நண்பர்கள், அன்பர்கள் எல்லோரும் ஏற்றுக் கொள்ளவும்.

திருவாலவாய், 525/2 காங்கேயன்துறை வீதி, யாழ்ப்பாணம். பி 980

தகவல்
க. கனகராசா
மில்க்வைற் தொழிலதிபர்


## சேவை

சகல இன

றேடியோ ❦ ரெலிவிசன் ❦ வீடியோடெக் ❦ Antenna மீளப் பொருத்துதல் என்பன உடன் செய்து கொடுக்கப்படும். வீட்டு மின்சாரவேலை, மின்சார பொருட்கள் என்பனவும் உடன் திருத்திக் கொடுக்கப்படும்.

விபரங்களுக்கு

**Jaffna Technical Institute**

ஸ்ரான்லி வீதி. (றெயில் கடவை அருகாமை) யாழ்ப்பாணம்.

பிரதான வீதி, (சேச் அருகாமை) பண்டத்தரிப்பு.

R / 15243

## கேள்வி மூலம் விற்பனை - 1986

ஐயா,

பனை மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான தோட்டங்களில் தேங்காய், தென்னோலை, பனை மரம், புல்லு ஆதியன 86-ம் ஆண்டுக்கு ரெண்டர் மூலம் விற்பனைக்கு உண்டு. நேரடிக் கேள்வித் திகதி: 10-01-1986 நேரம்: 8-30 மணி. மேலதிக விபரங்களுக்கு நேரில் வரவும்.

நன்றி!

மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபை
ஒப்பம்:
பதில் பிரதேச அத்தியட்சகர்

யாழ். பிரதேச பெருந்தோட்டங்கள்,
வெட்டுக்காடு எஸ்டேட்,
...னை.

B/979

## A/L 86

தூயபிரயோககணிதம்

பகல் நேர வகுப்பு

7-30: காவிசள்
8-45: நேர்கோடு

10-30: வட்ட இயக்கம்
11-45: சிக்கல் எண்

ஆரம்பம்: 3.1.86

ஆசிரியர்: ரவிமோகன்
யாழ்ப்பாணம்
(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்கும் இடையில்) R15247

# ‘மனித நல்லுறவு எனப்படுவது கலைப்பண்புகளில் ஒன்றே’

(சாவகச்சேரி)

“மனிதர்களுடன் ஊடாடிஉறவாடுவதும் ஒரு நற் கலைப் பண்பாகும். மனித நல்லுறவு என்பது, ஒரு குழுவினது தலைமைப் பீடத்திற்கும் ஏனைய உறுப்பினர்களுக்கு மிடையே நிலவும் நலமார்ந்த நல்லுறவினையும், நன்னெறி ஒழுங்கும் நட்பு மனப்பான்மையினையும் சுமுகமான இசைவு இணக்கத் தொடர்பையும் பெரும்பாலும் குறிக்கும். இந்த அடிப்படையிலே நமது மத்தியில் வாழும் நன் மக்கள் யாவரிலும் தலைமை சால் நற்பண்புகள் மிளிர்ந்திடும் பொழுதே நம் நாட்டில் சிக்கல்கள் அகன்று சிறப்புக்கள், நற்பண்புகள் பெருக முடியும்.’’

மேற்கண்டவாறு புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட ஆரம்ப சுகாதாரக் கண்காணிப்புக் குழுத் தலைவர் திரு. பஞ்சாட்சரம் தெரிவித்தார், கல்வயல் ஆரம்ப சுகாதாரக் குழுவின் புதிய தலைவர் தெரிவு உப-தலைவர் திரு. அருளம்பலம் தலைமையில் நடைபெற்றது. திரு. பஞ்சாட்சரம் புதிய தலைவராக ஏக மனதாகத் தெரிவு செய்யப்பட்டார். இவர் ஏற்கனவே இக்குழுவின் பொருளாளராகப் பதவி வகித்தார். இப்பொழுது பொருளாளர் பதவிக்கு திருமதி நடராஜா தெரிவு செய்யப்பட்டுள்ளார். புதிய தலைவரை செயலாளர் திரு. தர்மலிங்கம் உறுப்பினர் திரு. கே. எஸ். பொன்னையா ஆசிரியர் ஆகியோர் வரவேற்றனர்.

திரு. பஞ்சாட்சரம் தொடர்ந்து தனது உரையில், “எமது ஆரம்ப சுகாதாரக் கண்காணிப்புக் குழுவினதும், எமது தொண்டர்களினதும் நோக்கங்கள், நடவடிக்கைகள் அனைத்தும் எமது மக்களுக்குப் பயன்படக் கூடியதாகவும், ஏழை மக்கள் இதன் மூலம் நன்மைகள் பெறக் கூடிய அளவுக்கும் இருக்க வேண்டும். நாங்கள் இயங்கி இக்கிராமத்தின் ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்குவோம். அதற்கு இக் குழுவினது சகல உறுப்பினர்களினதும் ஒத்துழைப்பு அத்தியாவசியம் தேவை’’ என்றார்.

# வேலணையில் குடிசைகளிலும் மின்வசதி கிடைக்க ஒழுங்கு

(வேலணை)

வேலணை மின் அத்தியட்சகர் பிரிவுக்குள் வசிக்கும் ஓலை வீட்டுச் சொந்தக்காரர்களுக்கும், மின்சாரவசதி செய்து கொடுக்கப்படவுள்ளது.

தகுந்தமுறையில் குழாய்கள் வைத்து மின்சாரவயறிங்வேலை செய்திருந்தால் அவற்றை பரிசீலனை செய்தபின் மின்சாரம் வழங்கப்படும் என்று வேலணை பிராந்திய மின்சார அத்தியட்சகர் திரு. மார்க்கண்டு விஜயசிறி நமது நிருபரிடம் தெரிவித்துள்ளார்.

இவ்வோலை வீட்டுச் சொந்தக்காரர்களுக்கு தற்காலிகமாகவோ அன்றி நிரந்தரமாகவோ மின்இணைப்பு வழங்கப்படும்

இது இவ்வாறிருக்க இப்பகுதியில் சட்ட விரோத மின் பாவனையில் ஈடுபட்டுள்ளோர் அதனை உடனடியாக துண்டிக்கும்படி ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

வேலணை மின்பாவனையாளர் சங்கத்தினரே இவ்வறிவிப்பை செய்துள்ளனர் இவ்வறிவிப்பில் சட்ட விரோதமான முறையில் மின்பாவனை பெறுவதால் நிரந்தர மின்சாரம் பாவிப்போர் பாதிக்கப்படுவதாகவும், மின்மாற்றிகள் பழுதடையக்கூடிய ஆபத்துகள் ஏற்பட்டுள்ளதாகவும்நாட்டின் நலன் கருதியும் அகாலமரணத்தை தவிர்க்கவும் உடனடியாக இந்தச்சட்ட விரோத மின்பாவனையை துண்டிக்கும்படியும் கேட்கப்பட்டுள்ளது

## கருத்தரங்கில் அறிவுரை

# நீரிழிவு நோயாளிகளுக்கு சுய கட்டுப்பாடு அவசியம்

(காங்கேசன்துறை)

“உலகில் காணப்படும் ஆபத்தான நோய்களில் புற்றுநோய் முதலாமிடத்தையும் நீரிழிவு நோய் இரண்டாமிடத்தையும் வகிக்கிறது. நீரிழிவினுல் பீடிக்கப்பட்டவர்கள் கட்டுப்பாட்டுடன் தகுந்த சிகிச்சை பெற்றுத் தம்மைப் பாதுகாத்து நீண்ட ஆயுளுடன் பல காலம் வாழமுடியும்,’’ இவ்வாறு மாவைலயன்ஸ் கழகம் நடத்திய நீரிழிவு பற்றிய கருத்தரங்கில் கழகத் தலைவர் சர்மா பேசுகையில் குறிப்பிட்டார்.

வீமன்காமம் மகா வித்தியாலயத்தில் நடை பெற்ற இக் கருத்தரங்கிற்குத் தலைமை தாங்கிய யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் என். சரவணபவானந்தன் தனது உரையில்; ‘நீரிழிவு நோயினுல் கோடிக்கணக்கானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நோய் உடம்பின் பல்வேறு உறுப்புக்களிலும் ஆரம்பிக்கும். சுயகட்டுப்பாட்டுடன் வாழ்வதனுல் இந்நோயிலிருந்தும் ஒருவர் தம்மை நன்ருகப் பாதுகாத்துக் கொள்ள முடியும்’ என்ருர்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடப் பேராசிரியர் எஸ். வீ. பரமேஸ்வரன் நீரிழிவு நோய் உண்டாகும் விதம் பற்றி விளக்கமளித்தார். வைத்திய கலாநிதி. எஸ். நாகநாதர் நீரிழிவு நோய் இற்றைக்கு நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இருந்ததாகவும் பண்டைய மக்கள் புரோகித வைத்தியர் மூலம் சிகிச்சை பெற்றதாகவும் குறிப்பிட்டார்.

ஈற்றில் கருத்தரங்கில் கலந்து கொண்டவர்களுடைய கேள்விகளுக்கு வைத்திய கலாநிதிகள் பதிலளித்தனர். க. கதிரைமலையான் நன்றி கூறினுர்.

## மல்லாவி மகாவித்தியாலயத்தில்

# உயர்தர வகுப்பு ஆசிரியர் போதுமான அளவு இல்லை

(ஒட்டுசுட்டான்)

மாங்குளம் பகுதியிலுள்ள மல்லாவி மகாவித்தியாலயத்தில் உயர்தர வகுப்புக்களில் உயிரியல், தாவரவியல் பாடங்களை கற்பிப்பதற்கு போதிய ஆசிரியர்களை நியமிக்கும்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பாண்டியன்குளம், துணுக்காய் ஆகிய இரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலுமுள்ள மாணவர்கள் உயர்கல்வியை கற்றுவரும் இப்பாடசாலையில் உயர்வகுப்பு ஆசிரியர் பற்ருக் குறையினுல் இவர்களது கல்வி பாதிக்கப்படாத வகையில் ஆசிரியர்களை நியமிக்க மாங்குளம வட்டாரக் கல்வி அதிகாரி மு.சிவானந்தம் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அறியப்படுகின்றது.

# விநாயகர் ஆலயப் பணி

(ஊரைதீவு)

புங்குடுதீவு மடத்துவெளி வீரகத்திப் பிள்ளையார் ஆலய திருப்பணிகளை வைரக்கல்லால் செய்வதென ஆலய பரிபாலன சபை முடிவெடுத்து அதற்குரிய நிதி வசூலையும் ஆரம்பித்துள்ளது.

## தினகரன் ஆசிரியர் சிவகுருநாதன் பேச்சு:

# தமிழ்பேசும் மக்களின் நீண்டபயணத்தின் திசை மாற்றப்படக்கூடாது!

(அரியாலை)

“புனித நகரத்தில் புனித விழா நடைபெறுகிறது. இதை ஊர்ஜிதம் செய்வதற்குச் சமயப் பெரியார்கள் அணிசெய்வது அதன் சிறப்பம்சம் ஆகும். ஒரு மனிதனுக்குப் பல பருவங்கள் இருந்த போதும் 12வது ஆண்டு முக்கியமானதாகும். அவன் இளைஞனுக மாறுகின்ற வயது மட்டுமல்லாது, தான் பிறந்த காரணம் நோக்கம் தெளிவாகிற வயதாகவும் உள்ளது. இவ்வயதில் நல்வழிப்படுத்த வேண்டும். இல்லாவிடின் திசைமாறிச் செல்கின்ற சந்தர்ப்பமும் ஏற்படுவதுண்டு. நீண்ட பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ள எமது மக்களுக்கு நல்ல கலாச்சாரம், பாரம்பரியம். இதிகாசம், புராணம் இருக்கின்றன. குறிக்கோளுடன் செல்கின்ற வேளையில் பயணம் திசை மாற்றப்படக் கூடாது.’’

இவ்வாறு தினகரன் பிரதம ஆசிரியரும், சட்டத்தரணியுமான திரு. இ சிவகுருநாதன் அவர்கள் குறிப்பிட்டார். “நான்’’ உளவியல் சஞ்சிகையின் 12வது ஆண்டுச் சிறப்பு மலர் அறிமுக விழா நல்லூர் இந்து விடுதியில் திரு. இ சிவகுருநாதன் தலைமையில் நடைபெற்றது நல்லை ஆதீன கர்த்தா தினகரன் பிரதம ஆசிரியர், யாழ். மாநகரசபை ஆணையாளர் ஆகியோர் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார்கள். வண ஜீவா போல், அ.ம தி அடிகளார் வரவேற்புரை நிகழ்த்தினுர். இவ்விழாவில் நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரி சுவாமிகள் ஆசியுரை வழங்குகையில் குறிப்பிட்டதாவது;-

“முருகப் பெருமானின் அருளாட்சி இருக்கிற இந்நகரில் 12வது ஆண்டாகவெளிவருகிற இச்சஞ்சிகையின் சிறப்புமலர் அறிமுகவிழா நல்லநேரத்தில் நடத்தப்படுகிறது. சஞ்சிகைகள் மனதில் எழும் ஐயங்களை நிவிர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும். போட்டி, பொருமை மத்தியில் 12 வது ஆண்டை இச்சஞ்சிகை முடித்துள்ளமை ஒரு சிறப்பம்சமாகும் மதத்தலைவரால் பத்திரிகை நடத்துவது பாராட்டக் கூடியதாகும்’’ என்ருர்.

யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. சீ வி கே சிவஞானம் அவர்கள் சிறப்புரை ஆற்றுகையில் குறிப்பிட்டதாவது;-

“இது நல்லதோர் நிகழ்ச்சியாகும். இப்பொழுது தான் யாழ்ப்பாணத்தான் தமிழனுக வாழத் தலைப்பட்டுள்ளான். இவ்விழாவில்இருசமயச்சுவாமிகளும் ஒன்ருக இருக்கிருர்கள். சமய பேதங்கள் மறைகின்ற ஒரு நேரத்தில் நாம் இருக்கின்ருேம். எல்லாமே உளவியல் எனலாம். சமயமும், அடக்க முற்படுவதும், அடக்கப்பட மாட்டோம் என்பதும் உளவியல் உணர்ச்சிதான். பாசம், பற்று, குடும்பம்எல்லாவற்றையும் இவ்வுளவியல் உள்ளடக்கியுள்ளது. ஒரு மனிதனின் உள்ளுமையான உணர்வுதான் உளவியல். யாழ்ப்பாணத்தார் தமிழர்களாக வாழ நான் பத்திரிகை உழைக்க வேண்டும்’’ என்ருர்.

எழுத்தாளர் செம்பியன் செல்வன் ஆய்வுரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டதாவது:-

“குறிப்பிட்ட சில எழுத்தாளர்களே இன்று பத்திரிகைகளில் எழுதி வருகிருர்கள். இவர்கள் ஒருவரை ஒருவர் பாராட்டியும், சீராட்டியும் எழுதுகிருர்கள். புதிய முகங்களின் எழுத்துக்களைக் காண முடிவதில்லை. ஆனுல் நான் பத்திரிகையில் புதிய முகங்கள் எழுதுகிருர்கள். மிக எளிமையாகப் பாமரருக்கும் விளங்கும்படி எழுத வேண்டும். தமிழ் உணர்வு அதிகப்பட பழைய தமிழ்ச் சொற்கள் நவீனப்படுத்த வேண்டும் சமூகம் எதைவிரும்புகிறதோ; அது விரும்பும் வகையில் பத்திரிகை நடத்த வேண்டும். வடிவங்கள் சில பதிவுகளை ஏற்படுத்துகிறபடியால் பத்திரிகை நல்ல அமைப்புடனும் இருக்க வேண்டும். மனித குலத்தை நேசிக்கிற பணியை நான் பத்திரிகை செய்து வருகிறது என்ருர்.

எழுத்தாளரும் அதிபருமான சொக்கன் தனது விமர்சன உரையில் குறிப்பிட்டதாவது:—

“உளவியல் பாதிப்புக்கள் ஏற்படுகிற கால கட்டத்தில் வாழ்ந்துவருகிற எமக்கு மனச்சிக்கல்களைத் தெளிவிக்க நான் போன்ற பத்திரிகைகள் தேவைப்படுகின்றது. இது ஒரு காலத்தின் தேவையாகும். ஒவ்வொரு பத்திரிகைக்கும் ஒரு நோக்கம் உண்டு. நான் அறிவியல் சார்ந்த உளவியல் பத்திரிகையாகும். இதை ஒரு சமயக் குழுவினர் நடத்துவதால் கட்டுப்பாடு, ஒழுங்கு, மதிப்பு இருக்கிறது’’ என்ருர்.

நான் சஞ்சிகை ஆசிரியர் வண. வின்சன்ற் பற்றிக் அ. ம.தி. அடிகள் தனது பதில் உரையில் குறிப்பிட்டதாவது:

“நாங்கள் மதம் மாற்ற வரவில்லை. மனம்மாற்ற வந்திருக்கிருேம். மாற்றங்களில் தான் வளர்ச்சியைக் காணலாம். மாற்றம் இல்லாமல் வளர்ச்சி இல்லை. மதம்கடந்த நிலையில் பணியாற்ற வந்திருக்கிற நாம், ஒவ்வொரு மனிதனையும் வாழவைக்க முயற்சிக்கிருேம். ஓசியில் வாசிப்பவர்களையும், வாசியாமல் விமர்சிக்கிற ஆட்களையும் நான் விரும்புவதில்லை’’ என்ருர்.

இவ்விழாவில் புலவர் ஈழத்துச் சிவானந்தன் வெளியீடுகளின் விமர்சன உரை நிகழ்த்தினுர். முதல் பிரதியை ஆணையாளர் பெற்றுக்கொண்டார். சட்டத்தரணி கனககேசவன் அவர்கள் சிறப்புப் பிரதியைப் பெற்றுக் கொண்டார். திரு. எஸ் ஆறுமுகம்பிள்ளை திரு. பொன். பூலோகசிங்கம் திரு. இ தவகோபால் ஆகியோரும் பிரதிகளைப் பெற்றுக் கொண்டனர். மறைக்கல்வி நிலையத்தினரும் நான் சஞ்சிகையினரும் நடாத்திய 85-ம் ஆண்டுக்கான கலாச்சார நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான விருதுகளை யாழ். மாநகர சபை ஆணையாளர் வழங்கினுர்.

# சுமுகத்தீர்வு

(புலோலி)

குடத்தனை பொற்பத்தை கிராம சமாதான சபையில் கிராம மக்கள் 97 வழக்குகளைத் தாக்கல் செய்துள்ளனர். இதில் 71 வழக்குகள் விசாரணை செய்யப்பட்டுத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் மிகுதி 26வழக்குகளும் விசாரணைசெய்யப்பட்டு வருவதாகவும் சமாதான சபைச் செயலாளர் திரு. வி. சிவலிங்கம் அறிவித்துள்ளார்

பெற்ருஎசன்ஸ்சப்ளையேர்ஸ்
PETTAH ESSENCE SUPPLIERS

பேக்கரி தயாரிப்புகள்,
பிஸ்கட், ரொபி, இனிப்பு, குளிர்பானம்,
ஐஸ்கிறீம், சிற்றுண்டி வகைகளுக்கான சகலவிதமான
எசன்ஸ், கலர்ப்பவுடர், கேக் தயாரிப்புக்குத் தேவையான
சகல பொருட்களுக்கும்

ஊதுபத்தி — சாம்பிராணி
லைவு சூடம் — ரல்கம் பவுடர்
வெள்ளை மஞ்சள் வசலின்
வாசனைத்திரவிய எண்ணெய்
ஓடிக்கொலோன்
குளுக்கோஸ்

ஆகியவை தயாரிப்பதற்கான உற்பத்தி பொருட்களும்
ஏனைய இதர

பேப்பர் வகை — பொக்ஸ்போட்
காட்போட் — ஆற்போட்
நியூஸ்பேப்பர் — ஒயில் பேப்பர்
பிறவுண் பேப்பர்
ரிசு பேப்பர்
சலப்பின்

மற்றும் எல்லாவித பொலித்தீன் வகைகளுக்கும்
அச்சகங்கட்குத் தேவையான
சகல மை வகைகளுக்கும்

இன்றே எமது ஸ்தாபனத்திற்கு விஜயம் செய்து பாருங்கள்

223, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
223, Power House Road, Jaffna.

உதய சிந்தனை

தியாகம் செய்வதனல் ஒருவித இன்பம் பிறக்கவில்லையானல், அந்தத் தியாகம் தியாகமே அல்ல.
— மகாத்மாகாந்தி

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23336

இதய ஒலி

2-1-86 வியாழக்கிழமை (குரோதன) மார்கழி-18

## புத்தாண்டிலாவது உண்மை கூறுவார்களா?

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியினர் சமர்ப்பித்த மாற்று யோசனைத் திட்டத்தை இலங்கை அரசாங்கம் பரிசிலனை செய்கின்றதா? இல்லையா?

கடந்த சில வாரங்களாக அரசியல் வட்டாரங்களில் எழுப்பப்பட்டு வந்த கேள்வி இது தான்.

கூட்டணியினர் தமது மாற்று யோசனையைச் சமர்ப்பித்து சுமார் ஒரு மாதத்துக்கு மேலாகியும், இலங்கை அரசு உத்தியோகபூர்வமாகத் தனது கருத்தை அல்லது முடிவை இந்தியாவுக்குத் தெரிவிக்காதிருந்து வருகின்றது.

அதற்குப்பதிலாக, கூட்டணி கேட்பது போல வடக்கையும் கிழக்கையும் இணைத்த ஒரு மொழி மாநில அமைப்பை எந்தக் காரணம் கொண்டும் வழங்க முடியாதென பல தடவைகள் உள்ளூர் நிகழ்ச்சிகளில் அரசியல் பீடத் தலைவர்கள் பகிரங்கமாகத் தெரிவித்துவிட்டனர்

எனினும், உத்தியோகபூர்வமான பதிலெதுவும் தமக்குக் கிடைக்காததால், இந்தியா கொஞ்சம், கொஞ்சமாக இலங்கையை நெருக்க ஆரம்பித்துள்ளது.

பிரதமர் ராஜீவ் விதித்த புதிய நிபந்தனைகளும், டிக்ஷிற்- ஜனதிபதி சந்திப்பில் எடுத்துக் கூறப்பட்ட விடயங்களும் இந்தியாவின் கடினப் போக்கை துலாம்பரமாக்கியுள்ளன.

இந்து பத்திரிகைச் செய்தியொன்றின்படி, பாரத வெளியுறவுச் செயலர் திரு. ரமேஷ் பண்டாரியை பேச்சுவார்த்தை தொடர்பாக இலங்கைக்கு அனுப்புமாறு இலங்கை அரசு விடுத்த வேண்டுகோளை இந்தியா உதாசீனம் செய்துவிட்டதாக அல்லது நிபந்தனை விதித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

''கூட்டணியினர் தெரிவித்த மாற்று யோசனை தொடர்பாக இலங்கை அரசாங்கம் தனது நிலைப்பாட்டைத் திட்டவட்டமாகத் தெரிவிக்க வேண்டும்; அதன் பின்னரே அடுத்த கட்டப் பேச்சுக்கள் பற்றி யோசிக்க முடியுமென்று'' இந்தியா இலங்கைக்கு அறிவித்துள்ளதாக அந்தச் செய்தி மேலும் கூறுகின்றது.

ஆறு தடவைகள் சும்மா இங்கும் அங்குமாக வந்து போன பண்டாரியை மீண்டும் இலங்கைக்கு அனுப்புவதிலேயே இந்தியா கடினப் போக்கைக் கடைப்பிடிக்க ஆரம்பித்துள்ளது ஒரு திருப்பமே தான்

கொழும்பு திரும்பிய பாரதத்தூதுவர் டிக்ஷிற், ஜனதிபதி ஜெயவர்த்தனவுடன் நடத்திய தனிமையான சந்திப்பிலும் கூட கூட்டணியினரின் மாற்று யோசனைத் திட்டத்துக்கே இந்தியா முன்னுரிமை கொடுத்துள்ளது.

கூட்டணி சமர்ப்பித்துள்ள மாற்று யோசனைத் திட்டத்தைப் பரீசிலித்து, அதன் மூலம் உடன்பாடு காண்பதற்கு இலங்கை அரசு முன்வரவேண்டும் என்று இந்தியா விரும்புவதாக தூதுவர் டிக்ஷிற் ஜனதிபதியிடம் எடுத்துக் கூறியுள்ளார்.

மொத்தத்தில் பார்க்கும் போது இந்தியாவில் நடைமுறையிலுள்ளது போன்று, இலங்கையிலும் தமிழர் பாரம்பரிய பிரதேசத்துக்கான மாநில சுயாட்சி அமைப்பை உருவாக்குவதை பாரதம் விரும்புவது இதன் மூலம் புலனுகின்றது.

''கூட்டணியின் யோசனைகளை ஏற்கமுடியாது; அதனை முற்று முழுதாக நிராகரித்து விட்டோம்'' என்று கூறி வந்த ஜனதிபதி ஜெயவர்த்தன, ''கூட்டணியின் திட்டத்தை இலங்கை அரசு பரிசீலித்து வருவதாக'' சொல்லியுள்ளது அனைவருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அதுமட்டுமன்றி, பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்தியா இலங்கைக்கு உதவவேண்டுமென்றும் கேட்டுள்ளார்.

ஜனதிபதி என்ன சொல்கிருர்? உண்மையிலேயே கூட்டணியின் யோசனைகளை பரிசிலனை செய்கிருர்களா? இந்தியா வேறு என்ன விதத்தில் இலங்கைக்கு உதவ வேண்டும்?

இந்த ஆண்டிலாவது, நெஞ்சைத் தொட்டு உண்மையைக் கூறி, நேர்மையாக நடப்பார்களானல், பிரச்சினைக்கு விரைவாகவே தீர்வு கண்டுவிட முடியுமல்லவா!

" தமிழ் தேசியமும் சமுதாயக் கொந்தளிப்பும்" என்ற தலைப்பில், பேராசிரியர் கா. சிவத்தம்பி 31. 12. 85இல் சென்ற் ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில் நிகழ்த்திய ஹண்டி பேரின்பநாயகம் நினைவுப் பேருரையின் தமிழ் மொழி பெயர்ப்பு இங்கு தரப்படுகின்றது.

# தமிழர் பிரதேசங்களில் சமூக அரசியல் போராட்டம் தற்போது நடைபெறுகிறது

'தமிழ்த் தேசியமும், சமூக மோதல்களும்' தற்போது இலங்கையில் நிலவிவரும் சிங்களவர்-தமிழர் மனித இன நெருக்கடியைப் புரிந்துகொள்வதற்கான ஒரு பிரயத்தனம். நம்மத்தியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போராட்டத்தின் பண்பை, தன்மையையிட்ட எனது சிந்தனைகளை உங்களுடன் பகிர்ந்து கொள்வது எனது உத்தேசம். போராட்டத்தினது தன்மையையும் பண்பையும் நாம் திண்ணமாகப் பற்றிக் கொள்ள வேண்டும். அல்லாவிட்டால், எம்மத்தியில் நிகழ்ந்து வருவது என்ன என்பது குறித்த எமது மதிப்பீடு தப்பானதாகிவிடலாம் என நான் பூரணமாக நம்புகிறேன். தவருன மதிப்பீடு பிழையான மனப்பான்மைகளுக்கும் செயல்களுக்கும் ஒருவரை இட்டுச் செல்லக் கூடும். ஆகவே, எடுத்துக்காட்டாக விளக்குவதாயின், ஒரு சில மரங்களைப் பார்ப்பதோடு நின்றுவிடாமல், அவற்றுக்கு அப்பாலுள்ள காடு கண்களிற்படுதல் முக்கியமாகும்.

இன்றைய அரசியல் சம்பவங்களை ஒளிவு மறைவின்றிப் பின்வருமாறு விவரிக்கலாம்:-

தமிழர் நடத்திவரும் இப்போராட்டம், உறுதியாக்கப் பெற்ற, பாதுகாப்பான, ஓர் அரசியல் அந்தஸ்தை ஈட்டிக் கொள்ளும் பொருட்டானது. நிலைபேருக்கப் பெற்ற ஓர் அந்தஸ்துக்கான இப்போராட்டத்தின்போதும், அதன் காரணமாகவும் கட்டவிழ்த்து விடப்படும் சம்பவங்களே இவை.

இந்தப் போராட்டத்தின் கதி முன் என்றுமில்லாத படியான உச்சத்தை எய்தியுள்ளது. அதில், இலங்கைத் தேசத்திலுள்ள தமிழர் ஒவ்வொருவரதும் வாழ்க்கையும் பின்னிப்பிணைந்து இருக்கிறது. அவ்வாருக இருப்பது, அவர்களது வாழ்க்கை மட்டுமல்லாது, தெற்காசியப் பிராந்தியத்தின் நாளைய வலிமைச் சமநிலையும் ஆகும்.

ஆகையால் இப்பிரச்சினை இரண்டு மட்டங்களில் வைத்து நோக்கப்பட வேண்டியதாக உள்ளது: ஒன்று, இலங்கை நாட்டு மட்டத்தில்; இரண்டாவதாக, பிராந்திய, அனைத்து நாட்டு மட்டத்தில். நாம் அப்பிரச்சினையின் மத்தியில் வாழ்வோர் அத்துடன் ஏதோ ஒரு வகையில் அதிற் பங்குபற்றிக் கொண்டும் இருப்போர் ஆதலால், மேற்போந்த முதலாவது, அதாவது இலங்கை, மட்டத்தின் மீது எமது கவனத்தைச் செலுத்துவது பிரதானமாகும்.

இலங்கை மட்டத்தில் வைத்து இனங்காணப்படுகையில், பிரச்சினையின் அம்சங்கள் வருமாறு:

(அ) சிங்களவர் / தமிழர் உறவுகள் தொடர்பான அம்சங்கள் (முஸ்லீம்கள் / தமிழர்கள் உறவுகள் சம்பந்தமான அம்சங்கள் இவற்றினின்றும் எழும்.)

(ஆ) இலங்கையில் உள்ள தமிழர் மத்தியில் நிகழ்வன பற்றிய அம்சங்களும் அத்தமிழர்களுக்கு நிகழ்வனபற்றிய அம்சங்களும்.

(இ) சிங்களவர் மத்தியில் நடைபெற்று வருவனபற்றிய அம்சங்களும், அவர்களுக்கு நடைபெறுவனபற்றிய அம்சங்களும்.

மேற்குறித்த மூன்ருவது அம்சத்தை ஆராய்வது என் உத்தேசம் அல்ல. நான் மூக்கிய அக்கறை கொண்டு இருப்பது இரண்டாவது அம்சத்தின்மீது தான். இலங்கையிலுள்ள தமிழர் மத்தியில் நிகழ்வன பற்றிய அம்சங்களும், அவர்களுக்கு நிகழ்வனபற்றிய அம்சங்களும். ஆனல் முதலாவது அம்சத்தையிட்டுக் குறிப்பிடாது, இரண்டாவது அம்சத்தைக் கையாள முடியாது. ஆகவே, இப்பேருரையின் போது, முதலாம், இரண்டாம் அம்சங்களைக் கையாள்வது எனது குறிக்கோளாக அமையும் அவ்வாறு கையாள்கையில் இரண்டாவது அம்சத்தினை நான் வலியுறுத்தி நிற்பேன்'.



பேராசிரியர் கா. சிவத்தம்பி

எம்மைச் சூழச் சம்பவிப்பன வற்றைக் காணும், கேட்கும், சாட்சிகள் நாம். அவ்வகையில் எமக்கு நாமே விடுக்கக் கூடிய ஒரு வினு: இலங்கையில் தமிழர் வாழும் பிரதேசங்களில், சரியாக என்ன போராட்டம் நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது? விடை: இது ஒரு சமூக-அரசியற் போராட்டம்; அதில் கருத்தூன்றி இருப்பது சமுதாய பாகத்தைவிட, அரசியற் பாகத்தின்மீதே ஆகும். மேலும், சமுதாய பாகமானது அரசியல் பாகத்தினுள் அடங்கியிருக்கின்றது. அதனையும், சமூக அல்லது சமுதாய பாகமும் ஒன்றைவிட்டொன்று இணைபிரியாதன என்பதையும் நாம் இங்கு விரைவிற் காண்போம்.

'எமது சிந்தனை தெளிவுறும் நோக்கத்துடன், இவ்வரசியற் போராட்டத்தை விவரிக்கச் சற்று முயன்று பார்ப்போம்.

ஏலவே குறிப்பிடப்பெற்றபடி, இலங்கைத் தமிழர்களுக்கு நிலைபேருக்கப்பெற்ற ஓர் அரசியல் அந்தஸ்திற்கானதே இப்போராட்டம். இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழர் விடுதலைப் போராளி இயக்கங்களுக்கும் இடையில் நடந்தேறிய திம்பு மாநகர் முதலாம் கட்ட உரையாடல்களின்போது சுருங்க எடுத்தியம்பப்பெற்றவாறு, இலங்கைத் தமிழ் மக்களின் புதிய அந்தஸ்து பின்வரும் அடிப்படையில் அமைந்ததாக இருக்கும்:

1. தமிழர்கள் என்போர் தனிவேருன ஒரு தேசிய இனமாவர் எனக்கணித்துக் கொள்ளல்.

2. தமிழர் தாயகப் பிராந்திய ஒருமைப்பாட்டிற்கு உத்தரவாதம்.

3. தமிழரின் சுயநிர்ணய உரிமைக்குக் கணிப்பு.

4. பெருந்தோட்டத் தமிழர்களுக்குப் பூரண பிரஜாவுரிமைக்குரிய உரிமை.

இங்ஙனமாக தமிழர்களின், போராட்டமானது, அவர்களது மனித இனத்துவம், அவர்களது பிராந்தியமயம் என்பவற்றின் அடிப்படையில் அமைந்ததாகும்.

கோரிக்கைகளைக் குறிப்பிடுவதுமட்டும் போதாது. போராட்டம் நிகழும் களமும் அதனையொத்த முக்கியத்துவம் வகிக்கிறது. போராட்டம் ஒரு யுத்தச் சூழ்நிலையில் நிகழ்ந்து கொண்டிருக்க, தாக்குதல்களும் பதிலடிகளும் அங்கு இடம் பெறுகின்றன. தமிழரின் போராட்டத்தின்கண் முனைப்பாகச் செயற்படுவது ஒரு வன்முறைப் போராளித்துவம். அது இலங்கைத் தீவினுள் சட்டவிரோதமானது எனப் பிரகடனஞ் செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு சட்டம் ஆக்கப்பட்டுள்ளது. சட்ட ஒழுங்கு விதிகளும் விதிக்கப்பட்டன இவையெல்லாம் இருந்தனவாயினும், இத்தீவுக்கு வெளியே, மலைப்பாங்கான பூட்டான் நாட்டில், அதன் தலைநகராகிய திம்பு மாநகரில், இணக்க உரையாடல் மேசையின் இருமருங்கும் அமர்ந்த வண்ணம் அவர்களை, தமிழர்விடுதலைப்போராளிகளை சந்திக்க வேண்டியதாயிற்று.

பிணக்குகள் வெளிக்கொணரப்பெற்று முன் வைக்கவும் தீர்வுகாணவும் படுதற்கு ஏற்ற பாரம்பரிய அரங்கு பாராளுமன்றமே. இத்தகைய பாராளுமன்றம் அல்லது நாடாளுமன்றம் முற்ருக 'முறிந்து போன' நிலையில் இலங்கைத் தீவில் பயனற்றுப் போயிற்று. தீர்வு ஒன்றை ஏற்படுத்த ஆற்ருத ஓர் அரசியல் சக்தியாக அது

— 5ம் பக்கம் பார்க்க

# லெபனுன் அதிபரை கொல்ல முயற்சி; மீண்டும் யுத்தம்!

(பெய்றூட்)

லெபனுன் ஜனுதிபதி ஜமாயலைக் கொலை செய்ய மேற்கொள்ளப்பட்ட முயற்சியையடுத்து பெய்றூட்டில் மீண்டும் பலத்த சண்டை ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. மிகத்துணிச்சலும், திகலும் நிறைந்த விதத்தில் இக்கொலை முயற்சி நிகழ்ந்ததாக நேற்று அறிக்கைகள் தெரிவித்தன.

மோட்டார் அணி சென்று கொண்டிருந்த போது அடையாளம் தெரியாத துப்பாக்கி மனிதர்கள் அவற்றை நோக்கி சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் ஆனுல் அந்நேரம் ஜனுதிபதி காரில் இருக்கவில்லை என்றும் அறிவிக்கப்பட்டது.

தானியங்கித்துப்பாக்கிகளும் டாங்கி அழிப்புச் சாதனங்களும் பயன் படுத்தப்பட்டதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

இதனுல் ஜனுதிபதியின் இரு மெய்க்காப்பாளர்கள் காயமடைந்தனர், இருவரைக் காணவில்லை என்ற பெய்றூட் அறிக்கைகள் தகவல் தந்தன.

இதனையடுத்து மற்றெரு கிறிஸ்தவச் சமாதானத் தலைவரையும் கொல்ல முயற்சி நடந்ததாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

அவர் சென்ற காரின் மீது ரொக்கெட் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதனுல் அவரது மெய் காவலர் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர்தான் லெபனுனில் கிறிஸ்தவ, முஸ்லீம் கோஷ்டிகளுக்கிடையே சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

கிறிஸ்தவப் பகுதிகளிலேயே சண்டை வலுப்பட்டிருப்பதாகவும் கிழக்கு பெய்றூட்டில் ஐந்து வருடங்களுக்குப்பின் நிகழும் கடும் சமர் இதுவே என்றும் பிந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன.

## அதிகாரத் துஷ்பிரயோகம்

## சீன உயரதிகாரிகள் மீது மிகக் கடும் நடவடிக்கை

(பீக்கிங்)

சீனுவில் உயர் அரசு அதிகாரிகள் பலர் பலவேறு குற்றச்சாட்டுகளின்பேரில் தண்டிக்கப்படவுள்ளனர் என் தகவல் வெளியாகியுள்ளது.

இத்தகவலை நவசீன செய்தி ஸ்தாபனம் வெளியிட்டுள்ளது.

தனிப்பட்ட இலாபம் கருதிச் செயற்பட்டமை, அதிகார துஷ்பிரயோகம் செய்தமை, ஆடம்பர வாழ்க்கை வாழ்வது போன்ற குற்றச்சாட்டுகளின் பேரிலேயே இவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## எம். ஜி. ஆர். ரூபா 15 இலட்சம் உதவி

(சென்னை)

கர்னுடக மாநில வரட்சி நிவாரணத்திற்குத் தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து பதினைந்து இலட்சம் ரூபா நிதியுதவி அளித்துள்ளார்.

## 13 தங்கப்பதக்கம்

(கோவை)

கோயம்புத்தூரில் நடைபெற்றுவரும் தேசிய பெண்கள் விளையாட்டுப்போட்டிகள் திங்கட்கிழமை வரை தமிழ்நாட்டிற்கு பதின்மூன்று தங்கப்பதக்கங்கள்கிடைத்தன.

## "பகைமை மறப்போம்"

(அமிர்தசரஸ்)

"புதுவருடத்தில் பகைமை உணர்வு மறந்து வகுப்பு ஒற்றுமைகாப்போம்" எனபஞ்சாப் முதலமைச்சர் திரு. பர்னுலா தனது புதுவருடச் செய்தியில் தெரிவித்துள்ளார்

## பாக். பிரதமர் தெரிவிப்பு

## இஸ்லாமிய ஜனநாயக முறையே நாட்டுக்கு ஏற்றது

(இஸ்லாமாபாத்)

"பாகிஸ்தானில் அரசியல் சுதந்திரம் விரைவில் நிலைநாட்டப்படும்" என்று பிரதம மந்திரி ஜுனெஜோ உறுதியளித்துள்ளார்.

ஆனுல் அதற்கான கால வரம்பை அவர் தெரிவிக்கவில்லை.

இஸ்லாமிய ஜனநாயக முறைதான் நாட்டுக்கு வழிகாட்ட முடியும் என்றும் அவர் நாட்டு மக்களுக்கு வானெலி மூலம் விடுத்த செய்தியில் கூறியுள்ளார்.

இது இவ்வாறு இருக்க, பாகிஸ்தானில் இராணுவச் சட்டம் நீக்கப்பட்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் சிவில் நிர்வாகம் இன்னமும் ஏற்படவில்லை என பதினெரு எதிர்க் கட்சிகளைக் கொண்ட ஜனநாயக மீட்பு இயக்கம் தெரிவித்துள்ளது.

## இஸ்ரேல் பதிலடி கொடுத்தே தீரும் - பாதுகாப்பு மந்திரி

(டெல்அவிவ்)

ரோமிலும், வியன்னுவிலும் நடத்திய தாக்குதல்களுக்காகப் பதிலடி கொடுக்கப்படுமென இஸ்ரேலியப் பாதுகாப்பு அமைச்சர் எச்சரித்துள்ளார்.

எந்தவிதத் தாக்குதல் நடத்தும் வல்லமை இஸரேலுக்கு உண்டு என்று கூறிய அவர், டுனீஷியாவில் பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைமையகம் மீது நடத்திய தாக்குதல் மூலம் இது நிரூபிக்கப்பட்டுவிட்டது என்றும் சொன்னுர்.

## ரோம், வியன்னு தாக்குதல்

## லிபியாமீது சர்வதேச தடை: இஸ்ரேல் பிரதமர் வற்புறுத்து

(டெல்அவிவ்)

ரோமிலும், வியன்னுவிலும் சமீபத்தில் கெரில்லாக்களால் நடத்தப்பட்ட தாக்குதல்களின் பின்னணியில் லிபியா உள்ளது என்ற குற்றச் சாட்டுத் தொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ள இஸ்ரேல் பிரதம மந்திரி திரு. ஸிமோன் பெரஸ், "லிபியா மீது சர்வதேசத் தடை விதிக்கப்படவேண்டும்" என்று வலியுறுத்தியுள்ளார்.

இக்கெரில்லாத் தாக்குதல்களை நடத்தியது பலஸ்தீன விடுதலை இயக்கத்தில் இருந்து பிளவுபட்டுச் சென்ற அபுநிதால் என்பவரின் தலைமையிலான குழுவே எனக் குற்றஞ் சாட்டப்படுகிறது. அவர் இப்போது லிபியாவில் இருக்கிறுர்.

இத்தாக்குதல்களைக் கண்டித்துள்ள எகிப்து பதில் நடவடிக்கை எடுக்கவேண்டாம் என்று இஸ்ரேலை எச்சரித்துள்ளது.

இத்தாக்குதல்களை ஐக்கிய நாடுகள் பந்தோபஸ்துச் சபையினருடன் பாப்பரசர் 2-ம் அருளப்பர் சின்னப்பரும் கண்டித்துள்ளார்.

## தமிழர்....

- 4ம் பக்கத் தொடர்

வலு இழந்து போனமைக்கும் இப் போராளித்துவத்திற்கும் இடையில் காரண - காரிய (அல்லது ஏது - விளைவு) தொடர்பொன்று உண்டு.

இலங்கைத்தமிழர் விடுதலைப் போராட்டக் களத்தின் மூன்றும் அம்சமாக விளங்குவது இந்திய ஈடுபாடு. இவ்விந்திய ஈடுபாட்டிலும் இருவேறு அம்சங்களைக் கண்ணுறலாம். தெற்கு ஆசியாவில் முனைப்பான ஆற்றல் பாலிப்பது இந்திய நாடு. அது முதலம்சம். இரண்டாவது அம்சம் அதனை விட முக்கியமானது - இந்தியாவிலுள்ள தமிழர்கள் ஒரு முழு மாநில அரசாக, தமிழ் நாடு என அத்தேசத்தின்கண் இடம்வகிக்கின்றனர். இலங்கையில் உள்ள அவர்களது சகோதரர்பால் காட்டிவரும் அக்கறை, கவலையில், 'நாம் இந்திய தமிழ் நாட்டுத் தமிழர்கள். இலங்கைத் தமிழர் மீது எமக்குள்ள கவலை, அக்கறைக்கு மன்னிக்க வேண்டும்.' என்ற தோரணையில் அல்லவே அல்ல, இந்த அம்சம், தமிழ்த் தேசியத்திற்கு மேலுமொரு பரிமாணம் தருகிறது ('PANTAMILIAN SENTIMENT') தமிழர் அளாவிய பரிந்துணர்வு என இதனை எடுத்துக் கொள்ளலாம்.

(நாளை தொடரும்)

# 1985 திரும்பிப் பார்க்கிறேம்

நேற்றைய தொடர்

ஆடிக்கலவர நினைவாக ஊர்வலம், யோகேஸ்வரன் ஜீப் கடத்தப்பட்டது. 27. ஜனுதிபதி பதியுதீன் சந்திப்பு; இரவு தபால் ரயில் கொடிகாமத்தில் மறித்து சுலோகம் எழுதப்பட்டது; ஜுலை 83 கலவரத்தை கண்டித்து சில இடங்களில் ஊர்வலம்; உகண்டாவில் சதிப்புரட்சி. 28. யாழ் தேவியில் அஞ்சலி சுவரொட்டிகள் இன்ரசிற்றி யாழ்ப்பாணம் வந்து போனது; தூதுவர் டிக்சிற் ஹெக்டர் ஜெயவர்த்தனு சந்திப்பு; இலங்கை இராணுவத்துக்கு பாகிஸ்தானில் பயிற்சி என தகவல். 29. வவுனியா பண்டாரிக்குளத்தில் சீருடையினர் சுட்டு ஒருவர் பலி. ஊரெழுவில் சீருடையினர் நடைபவனி, குண்டுவெப்பு, புதுடில்லியில் சில இடத்தில் பூமியதிர்ச்சி; பூட்டானுக்கு வெளியே தமிழகக்குழுவுடன் பேச அரசு மறுப்பு எம். ஜி. ஆருக்கு யப்பானில் சிகிச்சை. 30. இராணுவத்துக்கு வந்த எட்டு பெற்றேல் டாங்கிகள் பரந்தனில் கடத்தல்; ஹெலிகப்டரில் இருந்து சூடு, ஒருவர் பலி; மன்னுர் பொலிஸ் நிலைய கட்டடத்தில் குண்டு வெடித்து சிறுவன் மரணம்; பொறகோவிலில் கலவரம். 31. வடக்கு கிழக்கில் யுத்த நிறுத்தத்தை தீவிரவாதிகள் மீறுவதாக அரசு இந்தியாவிடம் புகார்; கொழும்பில் தாக்குதல் நடாத்த ஈரோஸ் முயற்சி என குற்றச்சாட்டு, உயர் பொலிஸ் அதிகாரிகள் புதுடில்லி பயணம்.

## ஆகஸ்ட்

1 திருகோண மடுவில் புத்த பிக்கு கொலை. தீவிரவாதிகளே செய்ததாக அரசு குற்றச்சாட்டு; முல்லைத்தீவு எலி ஒயாவில் கண்ணிவெடி இருவர் பலி; ஹொட்டல் ஞானம்ஸில் 3 லட்சம் ரூபா பொருள் கொள்ளை; பிரதமர் ராஜீவ் டிக்சிற் தனிமையில் பேச்சு 2. யாழ்நகரில் மரண தண்டனையை எதிர்த்து ஆர்ப்பாட்ட ஊர்வலம்; வவுனியாவில் விமானப்படை முகாமுக்கு அருகில் தமிழ்க் காணிகள் சுவீகரிக்க முடிவு. மக்கள் வெளியேற்றம் மட்டுநகர் கொழும்பு ரயிலில் ஒருவர் சுட்டுக் கொலை. பதியுதீன் தலைமையில் இருவர் சென்னை பயணம் பதவியா மொறவேவா கண்ணிவெடிக்கு மாணவி பலி. சாவகச்சேரி மக்கள் வங்கி முன்பு ஆர்ப்பாட்டம் 3.வடக்கில் க.பொ.த. உயர்தரப் பரீட்சை ஆரம்பம். பற்றைக்குள் இருந்த வெடித்து இரு அகதிகள் மரணம்; முஸ்லிம் குழு இந்தியா பயணம்; பிரதமர் காந்தியின் கடிதம் தூதுவர் டிக்சிற் மூலம் ஜனுதிபதியிடம் கையளிப்பு; நீலன், சூசை திடீர் யாழ் விஜயம். அமெரிக்க டல்லாஸ் விமான நிலையத்தில் விமான விபத்து 130பேர் பலி. சென்னையில்முஸ்லிம் குழு கூட்டணி, தமிழீழக்குழு பேச்சு; திருகோணமடு சம்பவத்தின் விசாரணையில் புதிய திருப்பம்; யாழ் புகையிரத நிலையத்தில் இரவு 24 ஆயிரம் ரூபா கொள்ளை; நோருட் குழு யாழ் வந்தது 5. யாழ். கொழும்பு மெயில் ரயிலில் மோட்டார் சைக்கிள் கொள்ளை; இந்திய கடல் எல்லையில் பிடிக்கப்பட்ட மூன்று இலங்கை மீன்பிடி படகுகள் விடுவிப்பு; 6. பூஸாவில் இருந்து 500 பேர் விடுதலை; மன்னுர் நகரசபை பணம் கொள்ளை; கிண்ணியாவில் தீவிரவாதிகள் படையினர் மோதல், மூவர் பலி. இருவர் கைது. 7. ரமேஷ் பண்டாரி கொழும்பு வந்தார். ஜனுதிபதியுடன் பேச்சு. வடபகுதி பொலிஸார் தெற்கே இடமாற்றம். பாதுகாப்பு படையினருக்கு துணைப்படை உருவாகும் என ஜனுதிபதி தெரிவிப்பு. 8. தங்காலை சிறையில் தமிழ் இளைஞர் உண்ணுவிரதம் ஆரம்பம்; பண்டாரி தொண்டமான் பேச்சு. காரைநகர் மரணம் கொலை என தீர்ப்பு 9. மக்கள் வங்கி கிளைகள் முன்பு அடகு நகை வைத்தோர் போராட்டம்; பூட்டான் மாநாட்டை காலவரையின்றி ஒத்திவைக்குமாறு ஸ்ரீமாவோ ஜனுதிபதியிடம் வேண்டுதல்; பலாலி முகாமுக்கு வந்த பவுசர் வயாவிளானில் கடத்தல். விமானத்தில் இருந்து சூடு. வாழைச்சேனை தபால் நிலையத்தில் 39 ஆயிரம் ரூபா கொள்ளை. 10. வவுனியா ஸ்ரேசன் வீதியில் ட்ராக்டரில் குண்டு வெடித்து சப் இன்ஸ்பெக்டர் உட்பட ஐந்து பொலிஸ் மரணம். வவுனியாவில் பதற்றம் 50 கடைகள் தீக்கிரை. 10 தமிழர் சடலங்கள் மீட்பு. யாழ் தேவியில் சென்ற பயணிகள் கிளிநொச்சியில் இறக்கப்பட்டனர். யாழ். கச்சேரியில் இரவு கொள்ளை. 11. திருமலையில் அகதிகள் முகாமினுள் துப்பாக்கிப் பிரயோகம் 11 தமிழ் அகதிகள் மரணம். வவுனியாவில் மாஜி. எம். பி சிவா வீடும் உட்பட பல வீடுகள் தீக்கிரை பலாலி - டயிலிட்டி வீதியில் வீடு குண்டுவைத்து தகர்ப்பு. ஒருவர் பலி லலித் திருமலை விஜயம். 12. பூட்டான் பேச்சு இரண்டாம் கட்டம் ஆரம்பம்; எச். டபிள்யூ. ஜெயவர்த்தனுவுக்கு சகல அதிகாரமும் வழங்கப்பட்டுள்ளது. மக்கள் வங்கி கிளைகள் முன்பு இரண்டாவது கட்ட மறியல், யாழ்-மெயில் ரயிலில் மருதானையில் டைம் குண்டு கண்டுப்பிடிப்பு. ராணுவம் வெடிக்க வைத்தது. நாட்டின் புகையிரத நிலையங்களில் பாதுகாப்பு திருமலையில் பதற்றம் தமிழர், சிங்களவர் வெளியேற்றம் யாழ்- திருமலை பஸ் சேவை நிறுத்தம். தமிழக மீனவர் மீது கச்சதீவுக்கு அருகில் கடற்படை சுட்டு ஒருவர் பலி. சிலர் தாக்கப்பட்டனர்; யப்பான் ஜெட் விமானம் விழுந்து நொருங்கியது, 520 பயணிகள் பலி. 13. திருமலையில் பதற்றம், நிலாவெளியில் 38 சிங்கள மீனவர் லொறியுடன் கடத்தல்; மக்கள் வங்கி மறியல் போராட்டம் திம்பு பேச்சு வார்த்தையில் தமிழ் குழுவின் 4கோரிக்கைகளில் முதல்மூன்று நிராகரிப்பு. 14. வடபகுதி ரயல்கள் மருதானைவரையும் சேவை, கொழும்பில் இருந்து திருமலை சென்ற பஸ்ஸில் 10 தமிழர் படுகொலை, மதவாச்சியருகே இரு பஸ் பிரயாணிகளுடன் கடத்தல், கொழும்பில் பிக்குமார், ஸ்ரீமாவோ ஊர்வலம், மாத்தறையில் இருந்து தங்காலை வந்த தமிழ் கைதிகள் மீது சூடு, 6 பேர் பலி. பூட்டான் பேச்சு இழுபறி. 15. முருங்கன் ராணுவமுகாம் மீது தாக்குதல் முயற்சி பாவற்குளத்தில் இரவு மூன்று தமிழர் கொலை, சடலங்கள் எரிப்பு. திருமலை கல்விக்கந்தோர், மீது குண்டு வீச்சு செட்டிகுளம் பதற்றம், அல்லைப்பிட்டியில் குப்பைக்குள் கிடந்த குண்டுவெடித்து 11 வயது சிறுவன் பலி, இந்திய சுதந்திர தினம், இலங்கை பிரச்சினைபற்றி பிரதமர் ராஜீவ் பேச்சு, ரமேஷ் பண்டாரி திம்பு விஜயம், இரு குழுவுடனும் பேசினுர். 16. வவுனியா ராணுவ முகாம் அருகில் குண்டு வெடிப்பு, வீடுகளுக்குள் புகுந்து சூடு, நூற்றுக்கு மேல் மரணம், 400 குடும்பங்கள் வவுனியாவில் இருந்து

மிகுதி நாளை வெளிவரும்

ஈழமுரசு

## பாப்பரசர் சின்னப்பர் அடுத்தமாதம் இலங்கை விஜயம்

(கொழும்பு)

பாப்பரசர் 2-ம் அருளப்பர் சின்னப்பரை இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு இலங்கை அரசாங்கமும், இலங்கையிலுள்ள மேற்றிராணிமாரும் விடுத்திருந்த அழைப்பை அவர் ஏற்றுக் கொண்டுள்ளார். இலங்கையிலுள்ள பாப்பரசரின் தூதுவர் இதனை நேற்றுத் தெரிவித்தார். அடுத்தமாதம் பாப்பரசர் இந்தியாவிற்கு விஜயம் செய்யவுள்ளதால் அக்காலப்பகுதியில் அவர் இலங்கைவரமுடியாமலிருக்கும் எனவும் தூதுவர் மேலும் தெரிவித்தார். இவ் விஜயம் பெப்ரவரி இறுதிப் பகுதியில் இடம்பெறக்கூடுமெனக் கூறப்படுகின்றது.

★ யாழ். அரசாங்க அதிபர் அறிவிப்பு:

# மிளகாய் செடிக்கு விரைவில் காப்புறுதி திட்டம்

# அராலி, நாரந்தனையில் சிறு உரக்களஞ்சியங்கள்

இயற்கையின் கோளாறு, வேண்டிய நேரத்தில் விதைகள், உரவகைகள், கிருமிநாசினிகள் கிடைக்குமோ என்ற ஐயப்பாடு, குறைவான விற்பனை வசதிகள், இடையிடையே நிலவிய அசம்பாவிதங்கள் போன்ற காரணங்களால் முன்னை வருடங்களைப் போலல்லாது 1985 - 86 ம் ஆண்டு விவசாயத் திட்டத்தை உருவாக்குவதில் யாழ். மாவட்ட அரச ஊழியர்கள் பல சிரமங்களை எதிர்கொள்ள நேர்ந்ததாக யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் தெரிவித்துள்ளார்.

"1984 ம் ஆண்டு முற்பகுதியில் பெருவெள்ளத்தால் வெங்காயம் முழுமையாக அழிந்தது. விதை வெங்காயத்தை இந்தியாவிலிருந்து தருவிக்கும் முயற்சியும் கைகூடாமற்போனது ஆனாலும் உணவுக்கெனத் தருவிக்கப்பட்ட வெங்காயத்தைக் கொண்டு விதை வெங்காயத்தை விருத்தி செய்தமை யாழ். மாவட்ட விவசாயிகளின் ஆக்கத் திறமையைக் காட்டுகின்றது" எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

விதை உருளைக்கிழங்கைத் தருவிப்பதில் இருந்த முட்டுக்கட்டையால் கிழங்கு உற்பத்தி 1984/85 ம் ஆண்டில் பெருவீழ்ச்சி யடைந்த தெனவும், இவ்வருடத்தில் 1250 ஏக்கரில் கிழங்கு பயிரிட உத்தேசிக்கப்பட்டுள்ள தாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நாரந்தனை, அராலி ஆகிய இடங்களில் சிறு உரக்களஞ்சியங்களை மாவட்ட அபிவிருத்திச் சபை நிதி மூலம் உருவாக்கப்பட்டு வருவதாகவும், நீண்டகாலமாக எதிர்பார்த்த மிளகாய்ச் செடி காப்புறுதி செய்யும் திட்டமும் உருவாகி நடைமுறைப்படுத்தும் நிலையில் இருப்பதாகவும் அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

1985 - 86 ம் ஆண்டுக்கான யாழ். மாவட்ட விவசாய செயற்பாட்டுத்திட்ட அறிக்கைக்கு வழங்கியுள்ள அணிந்துரையிலேயே அரசாங்க அதிபர் இவ் விபரங்களைத் தெரிவித்துள்ளார்.

## இன்று மாநாடு

(வேலணை)

பாவனையாளர் உற்பத்தியாளர் விற்பனையாளர் மகாநாடு வேலணை உதவி அரசாங்க அதிபர் செல்வி மைதிலி சோமசுந்தரம் தலைமையில் வேலணை உதவி அரசாங்க அதிபர் பணிமனை மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

## விசர் நாய்கள் கடித்ததால் வேலணையில் இருவர் மரணம்

(வேலணை)

வேலணைப் பகுதியில் விசர் நாய்களின் தொல்லை தொடர்ந்து அதிகரித்த வண்ணம் இருக்கின்றது. இப்பகுதிகளில் கட்டாக்காலிகளாக பெருமளவு நாய்கள் வீதியில் திரிகின்றன. இந்நாய்கள் வீதியால் போவோர் வருவோரையும் கடித்து குதறி வருகின்றன.

இவ்வாரம் இந்த விதமாக விசர் நாய்களினால் கடியுண்ட இருவர் அடுத்தடுத்து வேலணையில் மரணமடைந்துள்ளனர். இவர்களின் மரணத்தின் எதிரொலியாக வீதியால் போவோர் வருவோர் யாவரும் அச்சமடைந்துள்ளனர். இந்த விசர்நாய்க் கடிக்கு இலக்காகியவர்கள் வேலணை துறையூரைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை இரத்தினம் (வயது 36) திருமணமான இவருக்கு மூன்று குழந்தைகள் உண்டு. மற்ற நபர் வேலணை சோளாவத்தையைச் சேர்ந்த முருகேசு சின்னத்துரை (வயது 60) என்னும் வயோதிபராவர்.

வேலணைப்பகுதியில் மட்டுமல்லாது தீவுப்பகுதியில் பல பாகங்களிலும் கட்டாக் காலி நாய்களினால் கடியுண்ட பலர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## வழிப்பறி அதிகரிப்பினால் மக்கள் நடமாட அச்சம்

(நல்லூர்)

அரியாலை மேற்குப் பகுதியில் வழிப்பறித் திருட்டுக்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. ஒரு குழுவினர் இரவு நேரங்களில் பயங்கரமான முறையில் வழிப்பறிப்புக்களை நடாத்திவருகின்றனர் என அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

புத்தாண்டுப்பிறப்பையொட்டி நல்லூர் பரி. யாக்கோபு தேவாலயத்தில் நடைபெற்ற நடுச்சாம ஆராதனையில் கலந்து கொள்ள துவிச்சக்கரவண்டியில் பயணம் செய்த கணவனையும் மனைவியையும் தள்ளி விழுத்தி மனைவியின் கழுத்திலிருந்த 15 தங்கப்பவுண் தாலிக்கொடியை அறுத்து எடுக்க முயற்சி செய்த குழுவினரின் முயற்சியை கணவன் தடுத்து நிறுத்த முற்பட்டபொழுது கணவனும், மனைவியும் சிறிது காயமடைந்தபொழுதிலும், வழிப்பறி முயற்சியில் ஈடுபட்ட குழுவினர் மக்கள் அவ்விடம் வந்துசேர அந்த இடத்தை விட்டு மெதுவாக நழுவிச் சென்று விட்டனராம்.

கணவன் எடுத்த தீவிரமுயற்சியினால் அவர்கள் சென்ற துவிச்சக்கரவண்டி சிறிது பழுதடைந்தபொழுதிலும் தாலி கள்வர் கையில் அகப்படாமல் காப்பாற்றப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

## பண்டத்தரிப்பு கூட்டுறவுச் சங்கத்தில்

## 35 ஊழியருக்கு வேலை நீக்க உத்தரவு; மறியலுக்கு முயற்சி

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்க மின்தறி ஆலை ஊழியர் நாளை மறுதினம் ஜனவரி நான்காம் திகதி முதல் சங்க அலுவலகத்தின் முன் மறியல் போராட்டம் ஒன்றை நடத்த நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

16 வருடம் மின்தறி ஆலை ஊழியராக சேவை ஆற்றிய தமது சேவை ஜனவரி ஐந்தாம் திகதியிலிருந்து சங்கத்திற்கு தேவையில்லை என தமக்கு வழங்கப்பட்ட வேலை நீக்க உத்தரவை ஆட்சேபித்தும், எதிர்த்தும் மறியல்போராட்டம் ஒன்றைத் தொடங்கித் தொடரவுள்ளனர்.

இலங்கை வர்த்தக ஊழியர் சங்க பண்டத்தரிப்பு கிளைத் தலைவர் திரு. க. சுப்பிரமணியம் இது பற்றித் தெரிவிக்கையில்; இத் தொழிலை நம்பியும், சங்க வளர்ச்சி கருதியும், தொடர்ந்து பணியாற்றிய குடும்பஸ்தரான ஊழியர் சுமார் 35 பேர் வேலைநீக்க உத்தரவால் பொருளாதாரப் படுகுழியில் தள்ளப்படுகின்றனர். பொருளாதார அவல நிலைமைகளை நிருவாகத்திற்கு விளக்கியும், நிர்வாகம் நமது கோரிக்கைகளை, நியாயவாதங்களை உதாசீனம் செய்துவிட்டது. நமது வடபிராந்திய தொழிற் சங்க பிரதிநிதிகளான திருவாளர்கள் ஆர். ஜெகநாதன், எஸ். சுந்தரலிங்கம் நிர்வாகத்துடன் பேச்சுவார்த்தை நடத்தியும் தோல்வியே கண்டோம். எமது இறுதிப் போராட்டத்தை திட்டமிட்டு தொடரவுள்ளோம் என்றார்.

### மூன்று வன்னிக்....

வங்களில் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார். வவுனியா அரசாங்க அதிபர் திரு கே. வி. லோகேஸ்வரன் வவுனியா தெற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. ஐயம்பிள்ளை ஆகியோரும் இவ்வைபவத்தில் பங்குபற்றுவர்.

### "அரசு விரைவில்...

"அரசாங்கம் தேர்தலை நடத்துமானால் தமிழ் மக்கள் தங்கள் இலட்சியத்துக்கமைய பிரதிநிதுகளைத் தெரிவு செய்து பாராளுமன்றம் அனுப்பச் சந்தர்ப்பம் கிடைக்கும். அவர்களுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்த முடியு"மெனவும் அவர் மேலும் சொன்னார்.

அத்தனகல தொகுதி எம். பியாக உடனடியாக பாராளுமன்றம் செல்ல உத்தேசமுண்டா என்று கேட்டபோது, "அது இப்போது அவசியமல்ல; வெளியிலிருந்து கனவேலைகளைச் செய்ய முடியும்" என்று பதிலளித்தார்,

### ஸ்ரீயாவுக்கு ...

ஏ. எம். ஜலால்தீன் ஆகியோரின் குடியுரிமைகளும் ஜனாதிபதியால் நேற்று மீண்டும் வழங்கப்பட்டது.

ஜனாதிபதி ஆணைக்குழு தனித்தனியாக நடத்திய விசாரணைகளின் இறுதியில் வழங்கிய தீர்ப்புகளையடுத்து இவர்கள் நால்வரின் குடியுரிமைகள் ரத்துச் செய்யப்பட்டன.

அரசியலமைப்பின் 34 வது பிரிவின்கீழ் தமக்களிக்கப்பட்ட விசேட அதிகாரங்களைப் பயன்படுத்தியே ஜனாதிபதி குடியுரிமையை மீண்டும் வழங்கியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### ராணுவம்....

இரு பிரிவுகளாக வட்டக்கச்சி, கனகபுரம் ஆகிய இடங்களுக்கு கவசவாகனங்கள் லொறிகள் மூலம் சென்ற இராணுவத்தினர் தேடுதல் நடத்தி துப்பாக்கிப்பிரயோகம் செய்தபோது வட்டக்கச்சி வாசியான ஆறுமுகம் வசீகரன் என்ற இளைஞர் படுகாயமடைந்தார். வட்டக்கச்சி ஆறுமுகம் வீதி, ஹட்சன் றோட், செல்வா வீதி ஆகிய இடங்களில் இராணுவத்தினர் பரவலாக துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர், இப்பகுதியில் வசிக்கும் நாகலிங்கம் துப்பிஜயா என்ற சமாதான நீதவான உட்பட சுமார் ஐந்துபேர் கைது செய்யப்பட்டு கிளிநொச்சி முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். கைது செய்யப்பட்ட இவர்கள் ஒரு லொறியில் ஏற்றப்பட்டு கொண்டு செல்லப்பட்ட போது இராணுவத்தினர் சைக்கிள்களிலும் மோட்டார் சைக்கிள்களிலும் முன்னும் பின்னுமாக சென்றனர்.

இதே நேரம் கார் ஒன்றில் கனகபுரம் நோக்கிச் சென்ற ஆயுதப்படையினர் அங்கே ஒரு இளைஞனைக் கைது செய்ததோடு பின்னர் அவரை அழைத்துக் கொண்டு கவசவாகனங்களிலும் நடைபவனியிலும் கனகபுரம் பகுதிக்குச் சென்று தேடுதல் நடத்தினர். அப்பகுதியில் செய்யப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தின் போது மார்க்கண்டு ஞானஸ்வரி (24) என்ற அப்பாவிப் பெண் சூடுபட்டு படுகாயமடைந்தார். இவர் யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கந்தன குளத்தில் உள்ள ஒருவீடு சந்தேகத்தின்பேரில் தீக்கிரையாக்கப்பட்டது.

இச்சம்பவங்களின் போது கனகபுரம் பாடசாலை அருகில் ஒரு கவசவாகனம் தடம்புரண்டதைத் தொடர்ந்து இரவு முழுவதும் படையினர் இதை மீட்கும் நடவடிக்கையில் ஈடுபட்டதோடு இப்பகுதிகளிலுள்ள ஒழுங்கைகள் வீதிகள் எங்கும் நடமாடிக்கொண்டிருந்தனர். துப்பாக்கிச் சத்தங்கள் கேட்டவண்ணமே இருந்தது.

## விபத்தில் ஒருவர் காயம்

(வண்ணார்பண்ணை)

தட்டாதெரு சந்திக்கு அருகாமையில் நேற்று வேகமாக வந்த மினிவான் ஒன்று சைக்கிளில் மூளாயிலிருந்து வந்து கொண்டிருந்த தாமசேகரம் பிள்ளை என்பவரை மோதியது. இதனால் இவர் பலத்த காயமடைந்ததுடன் யாழ். அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## மரண அறிவித்தல்

### R. F. இரத்தினசிங்கம்

R. F. இரத்தினசிங்கம் (பழைய வர்த்தகர், அளாவே) காலமானார். இவர் றேசின் அன்புக் கணவரும், டொரீன், யஸ்டின் (Savdia) புறூரேஞ், பிறுன்சிஸ் (Lanka Cement Ltd), கிறிஸ்டி (West Germany) அஞ்சலா (Canada), ஜெயந்திரன் (West Germany) ஆகியோரின் அன்புத் தந்தையும், இராஜேந்திரம் (Cement Corporation, K. K. S.), ஞானம், யசிந்தா, யோகினி, மேரி ஆகியோரின் அருமை மாமனருமாவார். அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து தை மாதம் 2ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10-30 மணியளவில் கரம்பன் றோமன் கத்தோலிக்க சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

J. G. RAJENDRAM,
"Ratna Mahal"
Karampan East, Kayts.

R 15252

"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அஸோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 2-1-86 வியாழக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 23836